**MCOP NO:3124/2024** **DATE: 09.04.2026**

எ.ம.சா : 1

பெயர் : திரு.கார்த்திக்

த/பெ : திரு.மனோகரன்

வயது : 36

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் சேப்பாக்கத்தில் உள்ள வேளாண்மை துறையில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எமசாஆ 1 முதல் 3 வரை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து தேதியில் பொலிரோ ஜீப்பை ஓட்டி வந்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி என் மீது தான் வழக்கு பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் மீது தவறு இல்லை என்று ஆட்சேபித்து நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் தவறால் விபத்து நடைபெறவில்லை என்றால் நான் புகாரை ஆட்சேபித்து எதிர் மனு தாக்கல் செய்திருப்பேன் என்றும், என் தவறால் விபத்து நடந்ததால் தான் இவ்வாறு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எந்தவித சமிக்ஞையும் செய்யாமல் திடீரென்று கிழக்கு பக்கமாக திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரமாண பத்திரிக்கை பத்தி 5ல் சொல்லிய சங்கதிகளுக்கு ஆவணமாக மசாஆ 6,7,12 ஐ தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பத்தி 6ல் விபத்தில் அடிபட்ட நபருக்கு சொற்ப காயம் தான் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் மசாஆ 4 ஆனது தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அந்த விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் மருத்து குழுவால் 15 சதவீதம் நிரந்த ஊன விழுக்காடு கொடுத்துள்ளார் அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு இந்த விபத்து வழக்கு குறித்து எந்த விவரமும் தெரியவில்லை என்றும், சாட்சியம் அளிக்கும் நிர்பந்தத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் நான் அஜாக்கிரதையாகவும், கவனகுறைவாகவும் வாகனத்தை ஓட்டியதால் தான் என்பதால், நான் பணிபுரியும் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.